RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt20412

# பெரியபுராணம் காரைக்கால் அம்மையார் நாயனார் புராணத்தில் மெய்ப்பாடுகள்

## க. கோவிந்தராஜ் [அ, *]

[அ] ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), பெரியநாயக்கன் பாளையம், கோவை-20, தமிழ்நாடு இந்தியா

# Periyapuranam Karaikkal Ammaiyar Nayanar Purana Truths

## K. Govindaraj [a, *]

[a] Department of Tamil, Sri Ramakrishna Mission Vidyalaya College of Arts and Science (Autonomous) Periyanaickenpalayam, Coimbatore-20, Tamil Nadu, India

* Corresponding Author: govindarajpn@gmail.com

Received : 09-06-2020
Accepted : 05-09-2020

Check for updates

**ABSTRACT**

Karaikal Ammaiyar is revered as the thirtieth Nayanmar among the 63 Nayanmars in Periyapurana. It is a great myth that proudly presents the unique Tamil cultural spiritual thoughts without borrowing from other language stories. There are 4286 Vridtappas in Periyapuranam. Among them Karaikalammaiyar Puranam 1717-1782 is composed of 75 songs. In these songs gets to know the complete Purana of Karaikal Ammaiyar. and the purpose of this article is to explain the facts along with the story in the life of Karaikal Ammaiyar.

**Keywords:** Karaikal Ammaiyar, 63 Nayanmars, Periyapuranam, Vridtappas

## முன்னுரை

பெரியபுராணத்தில் 63 நாயன்மார்களில் முப்பதாவது நாயன்மாராக வைத்து போற்றப்படுகின்றார் காரைக்கால் அம்மையார். பிறமொழி கதைகளை கடன் பெறாமல் தனித்துவமாக தமிழ் பண்பாட்டு ஆன்மீக சிந்தனைகளை பெருமையுடன் வழங்குவது பெரிய புராணம் ஆகும். பெரியபுராணத்தில் 4286 விருத்தப்பாக்கள் அமைந்துள்ளன. அவற்றுள் காரைக்காலம்மையார் புராணம் 1717--1782 ஆகிய 75 பாடல்களில் அமையப்பெற்றுள்ளது. இப்பாடல்களில் காரைக்கால் அம்மையார் பற்றிய முழுமையான புராணத்தை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் காரைக்கால் அம்மையாரின் வாழ்வியலில் கதையுடன் கூடிய மெய்ப்பாடுகளை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## காரைக்கால் அம்மையார் புராணம் கதை சுருக்கம்

காரைக்கால் அம்மையார் தனதத்தன் எனும் பெரும் வணிகருக்கு மகளாகப் பிறந்து கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். இவர் அடியவர்களை வரவேற்று உணவளித்து பொன் பொருள் அளிக்கும் திருத்தொண்டினை செய்து வந்தார். பின்னர் பரமதத்தன் என்பவரை மணந்து இல்லறம் நடத்தி வந்தார் ஒருசமயம் பரமதத்தன் இரண்டு

மாங்கனிகளை புனிதவதியாருக்கு வியாபாரி மூலம் கொடுத்தனுப்பினார். அதில் ஒரு மாங்கனியை அடியவருக்கு புனிதவதியார் உணவிட்டார். வீடு திரும்பிய பரமதத்தனுக்கு ஒரு மாம்பழத்தோடு உணவளித்தார். மிகுந்த சுவையுடன் இருப்பதைக் கண்டு மற்றொரு பலத்தையும் கொண்டு வருமாறு கூறினார். சிவபெருமானின் அருளால் அவர் கையில் ஒரு மாம்பழம் வந்தது சிவபெருமானின் அருளை எண்ணி மகிழ்ந்து அந்த மாங்கனியை கணவனிடம் கொடுத்தார் அது உலகிலேயே இல்லாத சுவையுடன் இருப்பதை உணர்ந்தான். இது எங்கிருந்து வந்தது எனக் கேட்டான். புனிதவதியார் நடந்ததைக் கூறினார். இதை நம்பாத பரமதத்தன் இறைவனை கேட்டு மற்றொரு பழம் கொண்டு வர முடியுமா என்றான். புனிதவதி யாரும் சிவபெருமானை வேண்டி மற்றொரு பழத்தை பெற்றார். இதைக்கண்டு அதிர்ந்த பரமதத்தன் புனிதவதியார் ஒரு தெய்வப் பிறவி என்று உணர்ந்தான். அதனால் அவரை விட்டு நீங்கி மற்றொரு பெண்ணை மணந்து வாழ்ந்து வரலானான்.

சுற்றத்தார்கள் புனிதவதியை பரமதத்தர் உடன் சேர்த்து வைக்க புனிதவதியாரை அழைத்து ஆனால் பரமதத்தன் தன் மனைவி குழந்தையுடன் புனிதவதியாரின் காலில் விழுந்து வணங்கினான். அதிர்ச்சி அடைந்த புனிதவதியார் இனி தனக்கு அழகு எதற்கு என்று எண்ணி தனக்கு பேய் வடிவம் வழங்குமாறு இறைவனிடம் வேண்டினார். சிவனருளால் அவர் எலும்புக்கூடாக பேய் உருவம் அடைந்தார். எல்லோரும் அச்சமும் ஆச்சரியமும் கொண்டு விலகி ஓடினர். இவர் சிவபெருமானைப் போற்றி அற்புதத் திருவந்தாதியயும் திரு இரட்டை மணிமாலையும் பாடி பணிந்தார். திருக்கைலாயம் சென்று கயிலை நாதனின் திருக்காட்சி கண்டார். எப்போதும் சிவனின் சிலம்ப திருவடிகளின் கீழ் இருக்க அருள்புரிய வேண்டும் என்று வேண்டினார். அவரது வேண்டுகோளை ஏற்ற கயிலைநாதன் திருவாலங்காட்டில் தமது திருநடனத்தைக் கண்டு தம்முடன் இருப்பாயாக என்று அருளிச் செய்தார். இறைவனின் திருநடனத்தை கண்டபடி ஈசன் திருவடியில் என்றென்றும் நிலைத்தார். இவர் காரைக்கால் அம்மையார் என அனைவராலும் போற்றப்பட்டார். இவ்வாறு காரைக்காலம்மையார் புராணம் வரலாறு அமையப்பெற்றுள்ளது. இப்புராணத்தில் பரவலாக வெளிப்படுகின்ற மெய்ப்பாட்டு சிந்தனைகளை காண்போம்.

## காரைக்காலம்மையார் புராணத்திலும் மருட்கை என்னும் மெய்ப்பாடு

காரைக்கால் அம்மையார் புராணத்தில் பெருமையால் பிறந்த வியப்பு என்னும் மெய்ப்பாடு அதிகமாக வெளிப்பட்டு நிற்கின்றது.

மருட்கை என்னும் மெய்ப்பாடு பற்றி

தொல்காப்பியர் கீழ்வருமாறு கூறுகிறார்

புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு சாலா மருட்கை நான்கே (Thamizhannal, 2010)

என்னும் நூற்பாவால் மருட்கை பற்றிய நான்குவித சிறப்பை எடுத்துரைக்கிறார்.

அதாவது,

புதியதாக வந்த வியப்பு

மிகப்பெரியதாக வந்த வியப்பு

மிகச் சிறியதாக வந்த வியப்பு

ஒன்று ஒன்றாய் மாறியது கண்டுவந்த வியப்பு

இப்படி நான்கு வகை வியப்பு என்னும் மருட்கை மெய்ப்பாடுகள் காரைக்காலம்மையார் புராணத்திலும் காணப்படுகின்றன.

## வியப்பைத் தருகின்ற ஊர்

காரைக்கால் அம்மையார் பிறந்த ஊரைப் பற்றி குறிப்பிடும் பொழுது சேக்கிழார் பெருமான் வியந்து பாராட்டுகிறார். இதனை,

கானல் மிசை உலவு

வளம் பெருகு திருக் காரைக்கால்

என்னும் சொற்றொடர் வழியாக அறியமுடிகின்றது (Sekkilhar, 1934). அதாவது திரு காரைக்கால் என்ற ஊர் மானம் மிக்க தரும நெறியில் நடந்து கொண்டிருக்கின்ற பெரு வணிகர் குடிகள் வாழ்கின்ற பகுதி என்று வியந்து போற்றுகிறார். இங்கு வியப்பு என்பது தன்னுடைய ஊரைப் பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது படிப்போருக்கும் மெய்ப்பாடு ஏற்பட்டு விடுகின்றது.

## வியப்பைத் தரும் கல்வி

புனிதவதியார் பிறந்து கற்கும் பருவத்தில் சிவபெருமானின் அன்பு மொழிகளை கல்வியாக மனம் விரும்பி கற்றார். இதனை

“பணி அணிவார்

கழற்கடிமை பழகி வரும்

பங்கு பெறத் தணிவில்

பெருமனக் காதல் ததும்ப வரும் மொழி பயின்றார்.

என்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார் (Sekkilhar, 1934). இங்கு கல்வி எனும் பெருமிதம் மெய்ப்பாடு வெளிப்பட்டு நிற்கின்றது.

## மகிழ்ச்சி அடையுமாறு பாராட்டு

பெருமையுடைய பல நல்ல உறவினர் மகிழ்ச்சி அடையுமாறு ஒன்றுகூடி நிற்கின்றனர் புனிதவதியார் பருவங்கள் தோறும் தந்தையார் தனதத்தனார் செய்கினறார். ஊர் மக்களால் பெரும் பாராட்டுகளுக்கு உரிய முறையில் புனிதவதி அம்மையார் வளர்கின்றார். சிறுமியுடன் வண்டல் விளையாட்டு விளையாடி மகளிர் விளையாட்டுகளில் எல்லாம் சிறப்புடன் திகழ்கின்றார். பாராட்டு நீ பாட்டையும் விளையாடும் பொழுது வெளிப்படும் மெய்ப்பாட்டையும்

மல்குபெரும் பாராட்டின்

வளர்கின்றார் விடையவர்பால்

அல்கியஅன் புடன்அழகின்

கொழுந்தெழுவ தெனவளர்வார்.

என்னும் பாடல் அடிகளின் மூலமாக உணரமுடிகின்றது (Sekkilhar, 1934).

## பேரழகு என்னும் வியப்பு

புனிதவதியார் தன்னுடைய பேரழகா அனைவரையும் பெருமிதம் கொள்ளச் செய்கின்றார். பண்பு என்னும் வெளிப்பாட்டு அழகினால் பருவந் தோறும் மரபார்ந்த பழங்குடியில் நன்றாக வளர்ந்து வருகின்றார் புனிதவதியார் இதனை,

ல்லவென உறுப்புநூ

லவர்உரைக்கும் நலம்நிரம்பி

மல்குபெரு வனப்புமீக்

கூரவரு மாட்சியினால்,

என்னும் சொற்றொடர் மூலமாக பண்பை பாராட்டும் பேரழகு வியப்பு மெய்ப்பாடு நிற்கின்றது (Sekkilhar, 1934).

## பெருமை தரும் புகழ் நிறைந்த வணிக மரபு

சிறப்புமிக்க பட்டினம் நாகைப்பட்டினத்தில் நீதிபதி என்ற பெயருடன் உலகில் பெருமை பெறும் புகழ் பொருந்திய வணிகன் பெற்ற மகனுக்கு காரைக்காலம்மையார் பெண் பேசும் பொருட்டு ஒன்றுகூடி அறிவுடையவர்கள் பேசுகின்றார்கள். அப்பொழுது புகழ் நிறைந்த வணிகம் மரபு குடியை கண்டு வியப்படைந்த நிற்கின்ற காட்சியில் அழகான மெய்ப்பாடு தோன்றி விடுகின்றது. இதனை,

"நீடியசீர்க் கடல்நாகை

நிதிபதிஎன் றுலகின்கண்

பாடுபெறு புகழ்வணிகன்"

என்னும் சொற்றொடர் வழியாக மெய்ப்பாட்டு சிந்தனையை அறிய முடிகின்றது (Sekkilhar, 1934).

## வியந்து மகிழ்ந்து செய்யும் மன செயல்

தனதத்தன் ஆர் குடும்பத்தாரும் நிதிபதி குடும்பத்தாரும் ஒருங்கிணைந்து புனிதவதி யாருக்கும் திருமணம் செய்ய முடிவு செய்து ஒன்றுகூடி பேசுகின்றனர். தனதத்தன் ஆர் கூறிய நற்செய்தியை கேட்டு நிதிபதி யார் உயர்ந்த பெருஞ் சிறப்பை பெற்றவனை போல வியந்து மகிழ்ந்து தனிப்பெரும் மகனுக்கு செல்வம் மிக்க சுற்றத்தாருடன் மணம் செய்ய முற்படுகின்றார். இந்த காட்சியை,

"உற்றவர்கள் உரைகேட்ட

நிதிபதியும் உயர்சிறப்புப்

பெற்றனன்போல் உவந்துதனிப்

பெருமகட்குத் திருமலியும்

சுற்றமுடன் களிகூர்ந்து

வதுவைவினைத் தொழில்பூண்டான்".

என்னும் அடிகள் மூலமாக அறியமுடிகின்றது (Sekkilhar, 1934).

## சுற்றத்தார் வியக்கும்படியான திருமணம்

இரண்டு வீட்டாரும் காரைக்கால் நகரத்திற்கு வந்தனர் அறநூல்களின் விதிப்படியே மனம் செய்வதற்கு சடங்குகள் எல்லாம் செய்து முடித்தனர் மயிலின் சாயலையும் உடைய புனிதவதி அம்மையாரை மாலை சூட்டி காளை போன்ற பரமதத்தனுக்கு சுற்றத்தவர் திருமணம் செய்தனர். இந்தக் காட்சியை

"தளிர் அடி மென் நகை மயிலை

தாதவிழ் தார்க் காளைக்கு

களி மகிழ் சுற்றம் போற்ற

கலியாணம் செய்தார்கள்"

என்னும் பாடலடிகள் மூலமாக சேக்கிழார் திறம்பட மெய்ப்பாட்டு உத்தியை கையாண்டு உள்ளார் (Sekkilhar, 1934).

## வியப்பைத் தரும் அளவற்ற செல்வங்கள்

மங்களகரமான திருமண சடங்குகள் முடிந்தது தனதத்தன் புனிதவதியார் ஒரே மகள் ஆதலால் கணவருடனே அந்த காரைக்கால் நகரத்திலேயே தங்கி இனிதாய் இல்வாழ்வு வாழ்ந்திருக்க அழகிய மாளிகையை அமைத்தான். மகளை திருமணம் செய்து தந்த மகிழ்ச்சியில் அளவற்ற செல்வங்களையும் தனதத்தன் தந்தான் அதனை கண்டு எல்லோரும் விருப்பமுடன் வியப்புற்று மகிழ்ந்தார்கள் என்பதனை

மகட்கொடையின் மகிழ்சிறக்கும்

வரம்பில்தனங் கொடுத்ததற்பின்

நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பில்

நிதிபதிதன் குலமகனும்

தகைப்பில்பெருங் காதலினால்

தங்குமனை வளம்பெருக்கி

மிகப்புரியும் கொள்கையினில்

மேம்படுதல் மேவினான்.

என்னும் பாடல் வழியாக வியப்பு மெய்ப்பாட்டை மகிழ்ந்து ரசிக்க முடிகின்றது. (Sekkilhar, 1934)

## வியப்பைத் தரும் சிவபெருமானின் அன்பு காதல்

இல்வாழ்க்கை துணைவியாக புனிதவதியார் திகழ்ந்தார். ஆனால் சிவபெருமானின் மீது அன்பு காதல் கொண்டு மேன்மேலும் பெருகும் படி இல்லறத்தின் பண்பு பிறழாது ஒழுகி வந்தார். சிவபெருமானின் திருவடியின் கீழ் வைத்த உணர்வு மேன்மேலும் பெருகும் படி வாழ்ந்து வந்தார். இதனை

ஓங்கியஅன் புறுகாதல்

ஒழிவின்றி மிகப்பெருகப்

பாங்கில்வரும் மனைஅறத்தின்

பண்புவழாமையில் பயில்வார்.

என்னும் சொற்றொடர் மூலமாக வியப்பு என்னும் மெய் பாட்டை அன்பு காதல் உணர்வினால் மேலும் உணரமுடிகின்றது (Sekkilhar, 1934).

## வியப்பைத் தரும் சிவதொண்டரின் வருகை

பரமதத்தனிடம் ஒழுக்கம் நிறைந்த சிலர் இரண்டு மாம்பழங்கள் கொடுத்தனர். அதனைப் பெற்றுக்கொண்டு புனிதவதியார் தம் இல்லத்தில் வைத்தார். அந்த நேரத்தில் சிவபெருமான் தொண்டர் ஒருவர் மிக்க விருப்பத்துடன் அந்த இல்லத்துக்கு வந்தார். பசிக்க உணவு கேட்டார். சிவனடியாரின் பசியை தீர்க்க விருந்தோம்பல் இலை வைக்கின்றார். கறிகள் சமைக்க பெறாமல் சாதம் மட்டும் சமைத்து இருந்த நிலையில் தம் வீட்டில் உள்ள இரண்டு மாம்பழங்களில் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து விருந்தோம்பல் செய்து இலையில் பரிமாறி உள்ள மகிழ்ச்சியுடன் துன்பம் துடைக்கும் இறைவரின் அடியாருக்கு உணவு செய்தார் புனிதவதியார். இந்த வியப்பை தரும் காட்சியை,

பணஅரவம் புனைந்தருளும்

பரமனார் திருத்தொண்டர்

உணவின்மிகு வேட்கையினால்

ஒருவர்மனை யுட்புகுந்தார்.

என்னும் நிலையில் ஒரு வியப்பு வெளிப்படுகின்றது (Sekkilhar, 1934).

வேதங்கள் மொழிந்தபிரான்

மெய்த்தொண்டர் நிலைகண்டு

"நாதன்தன் அடியாரைப்

பசிதீர்ப்பேன்" எனநண்ணிப்

பாதங்கள் விளக்கநீர்

முன்னளித்துப் பரிகலம்வைத்(து)

ஏதந்தீர் நல்விருந்தா

இன்அடிசில் ஊட்டுவார்.

என்னும் நிலையில் வியப்பைத் தரும் விருந்தோம்பலின் போது வெளிப்பட்டு நின்ற அன்பு மிக்க செயல் வழியாக வெளிப்படும் மெய்ப்பாட்டையும் இங்கு உணர முடிகின்றது (Sekkilhar, 1934).

## ஒரு மாம்பழம் இரண்டு மாம்பழங்களாக மாறிய வியப்பு

இல்லத்திற்கு பரமதத்தன் உள்ளே நுழைந்து பசித்து உண்ண உணவு கேட்கிறார். வீட்டில் உள்ள ஒரு மாம்பழத்தைக் கொண்டு வந்து இலையில் பரிமாறி விருந்தோம்பல் செய்கிறார் புனிதவதியார். சுவை மிகுந்து ஆசை நிரம்ப மாம்பழத்தை உண்ட பரமதத்தன். இது போன்று இன்னொரு பலம் உள்ளது அதையும் நெடுக என்று சொல்கிறார். மீண்டும் ஒரு பழத்தை கொண்டு வந்து இலையில் பரிமாறுகிறார் புனிதவதியார். என்னே வியப்பு இந்தக் காட்சி. இதனை,

"மெய்மறந்து நினைந்து பெற்ற விடத்து

உதவும் விடையவர் தான்

மாங்கன்று மூவுலகில் பெறற்கரிய

பெற்ற அதுவே வேறு எங்கு என்று

பெய் வளையார் தமைக் கேட்டான்."

இத்தகைய அரிய சுவையை உடைய மாம்பழத்தை எங்கு பெற்றார் என்று வியப்புடன் கேட்கின்றான் (Sekkilhar, 1934). அதற்கு இறைவன் தமக்கு அருளினான் என்று புனிதவதியார் கூறுகின்றார். இதனால் வியப்புடன் நடுக்கம் அடைந்த பரமதத்தனுக்கு கனி வந்த வரலாற்றை எடுத்துக் கூறினார் புனிதவதியார்.

இதனை,

மெய் வழி அன்று என விளம்பல்

விட மாட்டார் விதிர்ப்பு உறுவார்.

என்னும் கூற்றின் வழியாக அறியமுடிகின்றது (Sekkilhar, 1934).

## மீண்டும் கையில் ஒரு மாம்பழம் வந்தது வியப்பு

பரமதத்தன் இடம் கனி அளித்தது ஈசன் அருளே என்பதை தெளிவுபட எடுத்துக் கூறினார். மீண்டும் கனி ஒன்றை இறைவன் அருளால் பெற்று தருவாயாக என்று பரமதத்தன் கூறினான். அப்படியே செய்கிறேன் என்று இறைவன் திருவருளால் மீண்டும் ஒரு மாம்பழம் புனிதவதியார் கையில் வந்து பொருந்தியது. அந்த வாணிகன் பரமதத்தன் இடம் மாங்கனியை தந்தவுடன் வியந்து அதனை வாங்கினான். மீண்டும் கையில் அந்த மாங்கனியை காணவில்லை. இந்த செயலைக் கண்டு தனியாக அச்சம் கொண்டு உள்ளம் தடுமாறி புனிதவதியாரை மனிதர் அல்ல இவர் வேறு தெய்வம் என்று சொல்லாமல் தொடர்பின்றி வெளியில் சென்று விட்டான். மாங்கனி ஒன்று அருளால் வந்து எய்துதலும் மற்ற அதனை ஆங்கு அவன் கை கொடுத்து அதிசயத்து வாங்கினான் தனி வரும் பய மேற்கொள்ள உள்ளமும் தடுமாறு எய்தி அணிக்குள் அவரை வேறு ஓர் அணங்கு என கருதி

நீங்கும் இந்த காட்சி முழுவதும் பல்வேறு மெய்ப்பாடுகள் உடன் கதை கருத்து வளத்தை அமைத்துள்ளார் சேக்கிழார்.

## ஒவ்வொரு நிலையிலும் பல்வேறு மெய்ப்பாடுகள்

இப்படி பரமதத்தன் புனிதவதியார் விட்டு நீங்கி வாழ்ந்து வந்தான். பரமதத்தனை தேடி வருவோம் என்று வணிக மக்கள் மரக்கலத்தை செய்வித்து தேடுகின்ற காட்சியும் வியப்பைத் தருகின்றது. கடல் தெய்வத்தை வழிபட்டு கடலில் பயணிக்கின்ற வணிக மக்களின் ஒவ்வொரு செயலும் வியப்பைத் தருகின்றன பாட்டை ஏற்படுத்தி விடுகின்றது. பரமதத்தன் வேறொரு பெண்ணை மணந்து கொண்டு வாழ்கின்ற காட்சியின்போது காண்கின்ற ஒவ்வொரு செயலும் வியப்பைத் தருகின்றது. பரமதத்தனுக்கு வேறொரு பெண்ணுடன் மனம் கொண்டு அழகான ஒரு பெண் குழந்தை பிறக்கின்றது. பரமதத்தன் பாண்டிய நாட்டில் ஒரு நகரில் தங்கியுள்ளான் என்னும் செய்தி புனிதவதியாருக்கு வருகின்றது. துன்பம் கொண்ட மனம் கொண்டு புனிதவதியார் வேதனையுற்று காணப்படுகின்றார். அப்பொழுது அவரைப் பார்த்து அழைத்து அன்பு செய்கின்ற உறவினர்களும் இனிய மொழியை உடைய தோழியர் முதலான பெண்களும் சூழ்ந்து நெடுந்தொலைவில் பல நாட்கள் கடந்து போயினர். இந்த காட்சி எல்லாம் இனிய மெய்ப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது. பரமதத்தனுக்கு அச்சம் ஏற்பட்ட நிலையில் மீண்டும் புனிதவதியார் ஐ கண்டு நேரில் தன் நிலையை எடுத்துக் கூற வருகின்றான் இந்த காட்சியை

“வந்தவர் அணைந்த மாற்றம்

கேட்டலும் வணிகன் தானும்

சிந்தையில் அச்சம் எய்திச் செழு

மணம் பின்பு செய்த”

என்னும் பாடலடிகளால் இதை உணர முடிகின்றது (Sekkilhar, 1934).

## முடிவுரை

காரைக்காலம்மையார் புராணத்தில் அமைந்துள்ள 75 பாடல்களும் ஒவ்வொரு மெய்ப்பாடுகளை உணர்த்தி நிற்கின்றது. புனிதவதியார் சிவபெருமானின் மீது கொண்ட அன்பினால் ஒவ்வொரு நாளும் இறைவனின் பொற்பாதங்களை வணங்கி துதித்து மனம் ஒன்றிய அகநோக்கி மிக்க உள் உணர்ச்சியை மேற்கொள்ளுகின்ற காட்சிகளின்போது மெய்ப்பாடுகள் நிரம்ப வெளிப்பட்டு நிற்கின்றது. அழகு பொருந்திய மேனி இனிமேல் வேண்டாம் என்று இறைவனிடம் பேய் உருவம் வேண்டும் என்று வேண்டுகிறார் புனிதவதியார். இறைவனும் அருள் புரிய எலும்புக்கூடு பேய் உருவம் கொண்டார். இந்த காட்சியை கண்டு பல்வேறு சுற்றத்தாரும் தொழுது அஞ்சி நீங்க செல்கின்ற காட்சிகளெல்லாம் மெய்ப்பாட்டு காட்சிகளாகவே அமைந்துள்ளது. புனிதவதியார் தன் ஞானத்தால் சிவபெருமானை துதித்து அற்புதத் திருவந்தாதி பாடினார். கயிலை மலையில் சிவபெருமானை வணங்க செல்கின்றார். அப்பொழுது திருவிரட்டை மணிமாலை பாடுகிறார். கையிலை மலையில் உள்ள சிவனை வணங்குவதற்காக காலால் நடந்து செல்லாமல் தலையால் நடந்து சென்றார். இந்த காட்சியை கண்டு அனைவரும் வியந்தனர். நடையினை தவிர்த்து பார்மேல் தலையினால் நடந்து சென்றார் என்னும் சொற்றொடர் மூலம் இதை

உணரலாம். சிவனும் உமையம்மையாறும் புனிதவதி யாருக்கு அன்பு நிரம்ப அருள் புரிந்தனர். என்ன வரம் வேண்டும் என்று இறைவன் கேட்கின்றனர். அதற்கு புனிதவதியார் எக்காலத்தும் கெடுதல் இல்லாத இன்ப அன்பை வேண்டிக்கொண்டு இனி நான் பிறவாது இருக்கும் வரம் வேண்டும் பிறவி உலகின் உன்னை மறவாதிருக்க வரம் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார். புனிதவதியார் எப்போதும் ஆனந்தத்துடன் பாடிக்கொண்டு இருப்பாயாக என்று அருள் செய்தார். ஆதியோடு அந்தம் இல்லான் அருள் நடம் ஆடும் போது கீதம் முன் பாடும் அம்மை கிளர் ஒளி மலர்த்தாள் போற்றி வணங்கும் சேக்கிழார் பெருமானின் மை பாட்டு நெறிகள் மிக சிறப்பாக காரைக்கால் அம்மையார் புராணத்தில் அமைக்கப்பெற்றுள்ளது. நீதிபதியார் இறைவனை நேரில் கண்டு இறைவனின் திருக்கூத்தை நேரில் கண்டு வணங்கப் பெற்று விருப்பம் கொண்டு பேராசை கொண்டு மேலும் மேலும் வியப்படைந்து எட்டி இலவம் என தொடங்கி கொட்ட முழவம் குழகன் ஆடும் என்று முடிகின்ற திருப்பாட்டுகளால் திருப்பதிகத்தைப் பாடினார். இவ்வாறு காரைக்காலம்மையார் புராணம் முழுவதும் மருட்கை என்னும் வியப்பு மெய்ப்பாடு பல்வேறு இடங்களில் நிரம்ப காணப்படுகின்றன.

## References

Sekkilhar (1934) Sekkilhar Peruman Aruliya Periyapuranam ena valanngum Thirurhondar Puranam, Murugavel Puthaga Salai, Chennai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License